பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி

சென்னை – 4

31-07-2025 6:30

வியாழக்கிழமை மாலை

தலைப்புச் செய்திகள்

1) தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தை வலுப்படுத்தும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2) கல்வியால் உழைப்பால் சாதனை படைப்பவர்களைத்தான் தமிழ்ச் சமுகம் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

3) தமிழகத்தில் ஆணவப் படுகொலை சம்பவங்களை தடுக்க தனி சட்டம் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தை பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

4) மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக அஇஅதிமுக குற்றம்சாட்டியுள்ளது.

5) உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தை வலுப்படுத்தும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்று அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இதற்காக 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

*உணவு பதப்படுத்துதல் துறையை நவீனமயமாக்குவதற்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தை 6 ஆயிரத்து 520 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்துவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.*

<<<<>>>>

மரக்கன்றுகள் நடும் இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், அனைவரும் ஒருங்கிணைந்து பூமியைப் பசுமையாக்குவோம் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

<<<<>>>>

*கல்வியால் உழைப்பால் முன்னேறி சாதனை படைப்பவர்களைத்தான் தமிழ்ச் சமுகம் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.*

ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின நலப் பள்ளிகளில் பயின்று புகழ் பெற்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கு மடிக் கணினிகளையும், பாராட்டு சான்றிதழையும் வழங்கிய பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைப்பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்

கல்விதான் உண்மையான பெருமையை தேடித் தரும் என்றும், உயர் படிப்புகளுக்கு சென்றுள்ள இவர்கள், சாதனைகளை படைக்க வாழ்த்துவதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக அரசின் நிர்வாக திறமையின்மை காரணமாக அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறை கூறினார்.

<<<<>>>>

ஆணவப் படுகொலை சம்பவங்களை தடுக்க தனி சட்டம் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தை பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

நெல்லையில் சாதிய ரீதியில் படுகொலை செய்யப்பட்ட கவின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்த பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இதுபோன்ற குற்றங்கள் கண்டனத்திற்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.

கவினின் குடும்பத்தினருக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு தொல் திருமாவளவனும் கவின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

முன்னதாக தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கொலை சம்பவம் வேதனையும் அதிர்ச்சியும் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த கொலை வழக்கு தொடர்பாக காவல் துறை ஆய்வாளர் கட்ட பஞ்சாயத்து செய்துள்ளது ஏற்படையதல்ல என்றும், அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு தொல் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையே இவ்வழக்கின் முதற்கட்ட விசாரணையை சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினர் இன்று தொடங்கினர்.

<<<<>>>>

மத்திய அரசு சார்பில் ராஜராஜ சோழன் மற்றும் ராஜேந்திர சோழனுக்கு தமிழகத்தில் பிரமாண்ட சிலை அமைக்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளது, வரவேற்கத்தக்கது என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு கூறியுள்ளார்.

தைலாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கையை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. ராமதாசு வலியுறுத்தினார்.

<<<<>>>>

முல்லைப்பெரியாறு அணையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக தமிழக அரசு மரங்களை வெட்டுவதற்காக கேரள அரசு தடையில்லா சான்றிதழை வழங்கியுள்ளதாக உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்துவரும் நீதிபதி **Surya Kant** தலைமையிலான அமர்வு முன் கேரள அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் இதனைத் தெரிவித்தார்.

இதனையடுத்து இதற்குரிய சுற்றுச்சூழல் அனுமதியை 4 வாரங்களுக்குள் வழங்குமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

<<<<>>>>

வேளாண் விஞ்ஞானி பாரத் ரத்னா எம்.எஸ். சுவாமிநாதனின் நூற்றாண்டு பிறந்த தினத்தையொட்டி, புதுதில்லியில் 3 நாள் சர்வதேச கருத்தரங்கு நடைபெற உள்ளது.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சௌமியா சுவாமிநாதன், வரும் 7ஆம் தேதி இந்தக் கருத்தரங்கு தொடங்க உள்ளதாக தெரிவித்தார்.

**(Voice Byte – Sowmya Swaminathan – 35 Sec)**

<<<<>>>>

தமிழகத்தில் 11 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி திருமதி கவிதா ராமு, கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தின் மேலாண் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மீனவள ஆணையராக பணியாற்றி வரும் திருமதி கஜலட்சுமி, போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<>>>>

தென்னிந்திய பகுதிகளுக்கான ராணுவ தளபதியாக லெஃப்டினெண்ட் ஜெனரல் வி. ஸ்ரீஹரி இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

ராணுவத்தின் பல்வேறு படைப் பிரிவுகளிலும், பயிற்சி அமைப்புகளிலும் பணியாற்றியுள்ள அவர், இப்பொறுப்பினை ஏற்றுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 6 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்த அவர், சில பகுதிகளில் கனமழைக்கும் வாய்ப்புள்ளதாக கூறினார்.

**(Voice Byte – 1 - Senthamarai Kannan – 33 sec)**

கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக்கொண்டார்.

**(Voice Byte – 2 - Senthamarai Kannan – 35 sec)**

<<<<>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

*மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்டமுகாமினை மாநில அமைச்சர் திரு பழனிவேல் தியாகராஜன் இன்று தொடங்கி வைத்து பயனாளிகளுடன் கலந்துரையாடினார்.*

-----------

*வெளிநாட்டு வாய்ப்புகளை நாடுவோர் அரசின் வழிமுறைகளை பின்பற்றி பணியில் சேருமாறு சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி லட்சுமி சித்தார்த் ஜகடே கேட்டுக் கொண்டுள்ளார்.*

--------------

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் வல்வில் ஓரி விழா நடைபெற உள்ளதையொட்டி, நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள், அப்பகுதியில் உள்ள சுற்றுலாத்தலங்களை தூய்மைப்படுத்தும் பணியில் இன்று ஈடுபட்டனர்.

-----------

புதுக்கோட்டை மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது குறித்த ஒருங்கிணைப்புக் குழு ஆலோசனைக் கூட்டம், ஆட்சியர் திருமதி அருணா தலைமையில் நடைபெற்றது.

-----------

தென்காசி மாவட்ட ஆட்சியர் பேசுவது போன்று போலியான தொலைபேசி எண்களில் இருந்து அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் வந்தால் அதற்கு யாரும் பதிலளிக்க வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

-----------

*கோவை அருகே விவசாய தோட்டத்தில் இருந்த 25 அடி தண்ணீர் தொட்டியில் தவறிவிழுந்த காட்டு யானை உயிரிழந்தது.*

-----------

*மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து 7 ஆவது நாளாக 120 அடியாக நீடித்து வருகிறது.*

-----------

*செய்திகள்-1*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

------------

உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் பங்கேற்க இந்தியா தகுதி பெற்றுள்ளது.

நேபாளத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கான தகுதிச் சுற்று ஆட்டங்களில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் வெற்றி பெற்றன.

உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டி அடுத்த ஆண்டு லண்டனில் நடைபெற உள்ளது.

----------

இந்தியா - இங்கிலாந்து இடையேயான 5வது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, இன்று லண்டனில் தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மாணித்தது.

இதையடுத்து பேட் செய்து வரும் இந்தியா, முதல் இன்னிங்சில் 2 விக்கெட் இழப்புக்கு 72 ரன் எடுத்திருந்த நிலையில், மழை காரணமாக ஆட்டம் தடைபட்டுள்ளது.

------------

**Macau** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்

**<<<<The End>>>>**